**செ.வெ.எண்.21** **நாள்:08.06.2020**

## மாற்றுத்திறனாளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள இலவச பயண சலுகை அட்டையை ஆகஸ்ட் 2020 வரை பயன்படுத்தி கொள்ளலாம்.

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

நீலகிரி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தனது செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது,

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் இலவச பயண சலுகை அட்டையினை புதுப்பிக்க வேண்டி மாற்றுத்திறனாளிகள் அனைவரும் மொத்தமாக வருவதால் பயண சலுகை அட்டை வழங்குவதில் சிரமம் ஏற்படுகிறது.

மேலும் தற்பொழுது கொரானா வைரஸ் பாதிப்பின் காரணமாக ஏற்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கை காரணமாகவும் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள இலவச பயண சலுகை அட்டையை ஆகஸ்ட் 2020 வரை பயன்படுத்தி கொள்ளலாம். ஆகஸ்ட் மாதத்திற்கு பின்னர் 2020-2021 -ம் ஆண்டிற்கு புதிய இலவச பயண சலுகை அட்டை கோரும் பயனாளிகள் புதுப்பிக்கவும் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவகம், நீலகிரி மாவட்டம்.